# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.191/மா/2025
நாள் 13.01.2026

S.V. உதயகுமார்
நாகர்கோவில் — முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
நாகர்கோவில் மாநகராட்சி — எதிர் மனுதாரர்

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S ரோடு, கதவு எண் 439A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.உதயகுமார் என்பவரின் 26.05.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.05.2025 அன்று பெறப்பட்டு 191/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாகர்கோவில், பார்வதிபுரம், M.S ரோடு, கதவு எண் 439A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.V.உதயகுமார் என்பவர் 26.05.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நாகர்கோவில் மாநகராட்சியில் நடைபெற்ற பல்வேறு முறைகேடுகள் சம்பந்தமாக 19.11.2024 அன்று 11 குறைபாடுகள் அடங்கிய புகார் மனுவில் நடவடிக்கை எடுக்க வேண்டிய நகராட்சி நிர்வாகத்துறைக்கு சமர்ப்பித்தேன். இதன் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் 2 முறைகேடுகளுக்கு மட்டும் தனி தனி புகார் மனுவாக உள்ளாட்சி முறைமன்ற நடுவத்திடம் ஏற்கனவே வழங்கியிருந்தேன். இரு புகார் மனுவிற்கு ஆணை எண்.72/மா/2024 நாள் 21.01.2025 மூலம் உத்தரவு பெற்றுள்ளேன். மீதமுள்ள 7 குற்றச்சாட்டுகளை புகாராக தற்பொழுது சமர்ப்பிக்கின்றேன்.

1. சாலைகளில் பதிக்கப்பட்டிருந்த வண்ண கற்கள் (Paver Block) பெயர்க்கப்பட்டது முறைகேடு:–

2011ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை பதிக்கப்பட்டதும் நல்ல நிலையில் இருந்ததும் பல ஆண்டுகள் நீடித்து பயனளிக்கத்தக்கதுமான பேவர் பிளாக் சாலைகளை கான்கிரீட் சாலைகளாக மாற்றியமைத்து கீழ்காணும் முறைகேடுகள் செய்யப்பட்டுள்ளன.

I. நல்ல நிலையில் இருந்த பேவர் பிளாக் கற்களை பெயர்த்து மறு விற்பனை செய்து பண பலன் பெற்றுள்ளனர்.

II. கான்கிரீட் சாலைகள் அமைப்பதில் கமிஷன் பெற்று சாலைகள் தரமற்றதாக அமைக்கப்பட்டுள்ளது.

III. கான்கிரீட் சாலைகள் 5 ஆண்டுகளில் மறு சீரமைப்பு செய்யப்படும் போது சாலை உயரம் அதிகரிக்கும். இதனால் குடியிருப்புகளுக்குள் தண்ணீர் தேங்கி பாதிப்பு ஏற்படும்.

நாகர்கோவில் மாநகராட்சியால் சில ஆண்டுகளுக்கு முன்னர் குடியிருப்பு பகுதி தெருக்களில் சிறிய வண்ண கற்களை ஒன்றிணைந்து பதிக்கப்பட்ட பேவர் பிளாக் சாலைகள் வருங்கால திட்ட பணிகளுக்கு அகற்றி மீண்டும் பதிக்கும் (Relaying) வகையிலானதாகும். மேலும் சிறிய கற்கள் ஒன்றிணைந்த சாலை என்பதால் சேதமடைந்த பகுதியை மட்டும் அப்புறப்படுத்தி விட்டு புதிய கற்கள் பதிப்பதால் சாலையின் உயரம் அதிகரிக்காது என்பதால் குடியிருப்புகளுக்குள் நீர்புகாத வகையில் முதலில் அமைக்கப்பட்ட பேவர் பிளாக் சாலைகள் இன்று வரை நல்ல நிலையில் இருந்தன. பேவர் பிளாக் சாலைகள் சுமார் 40 நியூட்டன் / ச.மீ எடை தாங்கும் வலிமை உடையதாகும். குடியிருப்பு பகுதி குறுகிய சாலைகளில் பதிக்கப்பட்ட அனைத்து கற்களும் அதன் வண்ணங்கள் கூட மாறாமல் நல்ல நிலையில் இருந்தன.

பாதாள சாக்கடை திட்ட பணிக்கு குழாய்கள் பதிக்கும் பகுதிகளில் மட்டும் பேவர் பிளாக்குகளை அகற்றி விட்டு குழாய்கள் பதிக்கப்பட்ட பின்னர் அப்பகுதி மட்டும் கான்கிரீட் கலவைகள் மூலம் சரி செய்யப்பட்டன. முறையான திட்ட வரையறையின்றி பேவர் பிளாக்குகளை அகற்றுவதற்கு அரசால் எந்த விலையும் நிர்ணயம் செய்யாத நிலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பேவர் பிளாக்குகளை அகற்றிவிட்டு கான்கிரீட் சாலைகளில் குழாய் பதிக்கப்பட்டதாக கணக்கு காட்டப்பட்டுள்ளது. இச்செயல் மீது எவ்வித புகாரும் ஆட்சேபனையும் பெறாததாலும் பணபலன் பெற வாய்ப்பாக இருந்ததாலும் தற்போதைய மாமன்றமானது பல சாலைகளில் பேவர் பிளாக்குகளை முழுவதுமாக அகற்றி கான்கிரீட் சாலைகளாக மாற்றியுள்ளதை மறைப்பதற்கு நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில் Car Parking மற்றும் ஒருசில தெருக்களில் பழைய கற்களை (Relaying) செய்வதற்கு மதிப்பீட்டு தொகை உருவாக்கி பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட முறைகேடுகளை தவிர்த்திடும் பொருட்டு இந்த குற்றச்சாட்டை பதிவு செய்தேன்.

வார்டு எண்.16 பரமேஸ்வரன் தெருவில் பேவர் பிளாக்குளை பாதாள சாக்கடை திட்ட பணி குழாய்கள் பதிப்பதற்காக தோண்டிய பகுதிகளில் கான்கிரீட் மூலம் பேட்ச் ஒர்க் மேற்கொள்ள 30.12.2022ல் ரூ 99,000/– செலவு செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றபட்டு பணி நிறைவு பெற்றுள்ளது. மாமன்ற தீர்மானம் வரிசை எண்.18 நாள் 30.08.2023 அன்று சிப்பம் E3/684/23-24 (Package-VII) DAIF (2023-2024) அரசு மானிய நிதி மூலம் 12.07.2023 அன்று ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு முழுமையாக கற்கள் அகற்றப்பட்டு கான்கிரீட் சாலையாக மாற்றப்பட்டதற்கான புகைப்படம் பாதாள சாக்கடை குழாய்கள் பதிக்கப்பட்ட பின்னர் எடுக்கப்பட்ட புகைப்படம் ஆகியனவும் ஆதாரமாக பார்வைக்காகவும் இணைக்கப்பட்டுள்ளன.

2. <u>கேமராக்கள் பொருத்தப்பட்டதில் முறைகேடு</u> :

வலம்புரி உரக்கிடங்கில் DS-2CD1023 கேமராக்கள் 47 பொருத்தப்பட்டுள்ளன. இவற்றிக்கு தலா ரூ4800/– வீதம் மொத்தம் ரூ.9.30 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. google இணையத்தில் search செய்தால் இதன் விலை ரூ.2,035/–ஆகவே உள்ளது.

முறைகேடுகள் விபரம்:

வலம்புரி உரக்கிடங்கில் சுமார் 47 கேமாராக்கள் பொருத்துவதற்கு தலா ரூ.4800/– வீதம் மொத்தம் ரூ.2,25,600/– செலவிடப்பட்டுள்ளது. BOQ-ல் கண்டுள்ள கேமரா CODE மூலம் இணையத்தில் விலை அறிந்ததில் ரூ.2035 x 47 = ரூ.95,645/– மட்டுமே தேவை ஆனால் ரூ.2,25,600/– செலவிடப்பட்டது மட்டுமின்றி, இவை நிறுவிடுவதற்கான இதர செலவினங்களுடன் சேர்த்து மொத்தமாக ரூ.9,30,000/–க்கான மொத்த செலவின முறைகேடு செயலினை ஆட்சேபித்துள்ளேன்.

ஒப்பந்தப்புள்ளி BOQ நகல் கேமரா CODE இணையத்திலான விலைப்புள்ளி விவரம், இதர பொருள்களுக்கு உள்ளூர் கடை விலைப்புள்ளி விவரம் மாமன்ற தீர்மான வரிசை எண்.43 நாள் 25.10.2024 தீர்மான எண்.787 ஆகியன பார்வைக்காக இணைக்கப்பட்டுள்ளன.

3. சமூக வலை தளங்களில் விளம்பரம் செய்ததில் முறைகேடு:

சமூக வலைதளங்களான facebook, twitter, Whats app, etc முலம் நாகர்கோவில் மாநகராட்சி செய்தியை இணையத்தில் விளம்பரப்படுத்திட பத்து மாதங்கட்கு ரூ.9,99,600/– செலவிட அனுமதிக்கப்பட்டுள்ளது. மாமன்ற வரிசை எண் 66 நாள் 30.08.2024, E1/10651/2024.

மேற்கண்ட செலவினத்திற்கான விலை புள்ளிகள் இணையத்தின் மூலம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. மேலும் உள்ளூர் செய்தித்தாள்களில் விலை புள்ளிகள் கோரி விளம்பரம் செய்திடவும் இல்லை. நகராட்சி நிர்வாக ஆணையாளரால் விலை புள்ளியில் கலந்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த பணி நிறுவனங்கள் அனைத்தும் வெளியூரை சார்ந்ததாக உள்ளன. மேலும் மாமன்ற உறுப்பினர் என்ற முறையில் 5வது வார்டில் நடக்கும் பணிகளைப் பற்றிய புகைப்படங்களை பதிவேற்றம் செய்வதற்கு மேற்கண்ட ஒப்பந்தம் பெற்ற ஒப்பந்ததாரரின் தொலைபேசி எண்ணோ முகவரியோ மாமன்ற உறுப்பினர் என்ற முறையில் தெரிவிக்கப்படவில்லை. ஒப்பந்த விதிமுறைகள் மீறப்பட்டதால் ஆட்சேபனையினை தெரிவித்துள்ளேன்.

சமூகவலைதளங்களில் விளம்பரப்படுத்தப்பட்டது மற்றும் மாமன்ற தீர்மான நகல் ஆகியவை பார்வைக்காக இணைக்கப்பட்டுள்ளன.

4. மண் விற்பனை மூலம் முறைகேடு:

நாகர்கோவில் மாநகராட்சி சாலை பணிகளின் போது எடுக்கப்பட்ட மண் அனாதை மடம் உட்பகுதியில் சேமித்து வைக்கப்பட்டிருந்தது. அதை கனிமவளத்துறை அனுமதி இன்றியும் டெண்டர் இன்றியும் விருப்பமான ஒப்பந்ததாரருக்கு வழங்கியதில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மண் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவில் மாநகராாட்சி பாதாள சாக்கடை திட்ட பணி குழாய்கள் பதிப்பதற்காக பெரும்பாலான சாலைகளில் தோண்டப்பட்ட மண் அனாதை மடம் பகுதியில் சேமித்து வைக்கப்பட்டது. இம்மண் குவியல்களை கனிமவளத்துறை அனுமதி இன்றியும்

நாகர்கோவில் மாநகராட்சியால் ஒப்பந்தப்புள்ளி ஏதும் கோராமலும் மற்றும் விலை புள்ளி பெற்று மண் விற்பனை செய்யப்பட்டுள்ளது. விலை புள்ளிகள் கோரி எவ்வித பத்திரிக்கை விளம்பரமும் மேற்கொள்ளப்படவில்லை. இம்முறை கேடான செயலை மறைப்பதற்கு சட்ட விதி 15ன்படி பணி மேற்கொள்ளப்பட்டதாக காரணம் காட்டப்பட்டுள்ளது. சட்ட விதி 15 அவசர கால கட்டம் / அரசு உத்தரவு இயற்கை பேரழிவு/பொறியியல் துறை உதவி பொறியாளர் நேரடியாக அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் வழி வகுக்கப்பட்டதாகும். ஒப்பந்ததாரர் மூலம் மண் குவியலை அகற்றும் திட்டப் பணிக்கு சட்ட விதி 15 பொருத்தமற்றதாகும். திட்டப் பணிகளை திட்டமிட்டு மற்றும் செயல்படுத்திட பொறியியல் துறைக்கு போதிய கால அவகாசம் வேண்டும். அரசு சட்ட திட்டத்தின்படி முறையாக ஒப்பந்த புள்ளிகள் பெற்று திட்டங்கள் செயல்படுத்த வேண்டும். கனிமவளத்துறை அனுமதி பெற்றதற்கு மன்றத் தீர்மானத்தில் எவ்வித குறிப்பும் இல்லை.

சட்ட விதி 15–ஐ முறையாக பயன்படுத்திட நகராட்சி நிர்வாக ஆணையாளர் அனுப்பிய சுற்றறிக்கையின் நகல் மண் அள்ளி மாற்றுவதற்கு விலை புள்ளி பெறப்பட்டதாக மன்றத்தில் பதிவு செய்த மாமன்ற தீர்மான வரிசை எண்.14 நாள் 30.08.2022 கோப்பு எண்.6372/2022/E1 நகல் ஆகியன இணைக்கப்பட்டுள்ளது.

5. <u>சுப்பையார்குளம் சீரமைப்பு முறைகேடு:</u>

கிருஷ்ணன் கோயில் பகுதி சுப்பையார் குளம் புனரமைப்புக்கென சுமார் மூன்று கோடி ரூபாய் மதிப்பிலான மண் / ஒப்பந்ததாரர் மூலம் சட்டத்திற்கு புறம்பாக அகற்றி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நாகர்கோவில் மாநகராட்சியால் மத்திய அரசின் நிதியைப் பெற்று சுப்பையார்குளத்தை மறுசீரமைப்பு செய்வதாக குறிப்பிட்டு குளத்திலிருந்து மண் அகற்றப்பட்டதால் குளம் மிகவும் ஆழமாகி அதன் கொள்ளளவை விட அதிகமாக அதாவது தண்ணீர் வெளியேறும் வாய்ப்பகுதியின் அடிப்பகுதிக்கு கீழேயும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. இதனால் இன்று வரை பொதுமக்கள் பலர் குளத்தினுள் விழுந்து இறந்துள்ளனர். இந்தக் குளம் பொதுப்பணித்துறைக்கு சொந்தமானது. குளத்தை புனரமைப்பு செய்வதற்கு பொதுப் பணித் துறை இடம் இருந்து நாகர்கோவில் மாநகராட்சியால் எவ்வித அனுமதியும் பெறவில்லை. மேலும் மண் அப்புறப்படுத்துவதற்கு கனிமவளத்துறையிடம் முறையான அனுமதியும் பெறப்படவில்லை. நாகர்கோவில் மாநகராட்சி குளத்தை புனரமைப்பதாக கூறி மண்ணை அகற்றி உரிய அனுமதியின்றி விற்று மாநகராட்சி பணியாளர்களும், மேயரும் ஒப்பந்ததாரர் மூலம் பணப்பலன் பெற்றுள்ளனர். இதற்கு எதிராக லஞ்ச ஒழிப்பு துறையில் வழங்கிய எனது புகாரின் பெயரில் நாகர்கோவில் மாநகராட்சி சுப்பையார் குளத்திற்கு பயன்படுத்திய கோப்புகளை பெற்றுள்ளதாக இன்றுவரை கூறுகிறது. மேலும் குளத்தில் அளப்பதற்கு முழுவதும் தண்ணீர் இருப்பதால் அளவீடு செய்ய இயல முடியவில்லை என்று லஞ்ச ஒழிப்புத்துறை காரணம் காட்டி வருகிறது. இதன் காரணமாகவே நான் இந்த புகாரை பதிவு செய்தேன்.

ஆதாரமாக லஞ்ச ஒழிப்புத்துறைக்கு வழங்கிய புகார் கடிதம் லஞ்ச ஒழிப்புத்துறை எனக்கு வழங்கிய பதில் மனு கடிதம் நாகர்கோவில் மாநகராட்சியால் சுப்பையார்குளத்தை தூர் வாருவதற்கான மன்ற தீர்மான வரிசை எண்.62 நாள் 29.07.2022 கோப்பு எண் 6277/2022/E3 ஆகியவற்றின் நகல் ஆதாரங்களாக இணைத்துள்ளேன்.

6. <u>உயரிய நிலையில் பயன்பாட்டில் இருந்த தெரு விளக்குகளை மாற்றியமைத்து முறைகேடு:</u>

மின்கட்டண செலவீனத்தை குறைப்பதற்காக தெருவிளக்குகள் மாற்றுவது என திட்டமிட்டு நல்லநிலையில் இருந்த **14,259** தெருவிளக்குகளை அகற்றிவிட்டு புதிய தெருவிளக்குகள் அமைக்க ரூபாய் **15,95,08,000/–** செலவினம் செய்து மேற்கண்ட பணிக்கு பெருந்தொகை கமிஷன் பெற்றதுடன் பழைய மின்விளக்குகளை விற்பனை செய்து மொத்த தொகையும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவில் மாநகராட்சி தெரு விளக்குகளுக்கான மின் கட்டணச் செலவை குறைப்பதற்காக மத்திய அரசிடம் இருந்து நிதி பெற்று மின்சாரம் குறைவாகவும் அதிக வெளிச்சத்துடன் ஒளி தரும் ஒளிவிளக்குகளை மாற்ற ஒப்பந்தம் கேட்கப்பட்டு மன்ற அனுமதிக்கு வரப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் அனைத்து வார்டுகளிலும் நல்ல முறையில் இயங்கி கொண்டிருந்த மின் விளக்குகள் மாற்றி அமைக்கப்பட்டன. ஆனால் முழு செயல்திறனில் பயன்பட்டுக் கொண்டிருந்த மின் விளக்குகளை வேறு இடங்களில் பயன்படுத்துவதற்கு ஒப்பந்த புள்ளியில் எந்த நிபந்தனையும் விதிக்கப்படவில்லை. இதன் காரணமாக நான் மாமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது ஒப்பந்ததாரர் அதை விற்று விட்டதாக மாமன்ற கூட்டத்தில் மேயர் தெரிவித்தார். நல்ல நிலையில் பயன்பாட்டில் இருந்த மின் விளக்குகளை விற்றதால் நாகர்கோவில் மாநகராட்சிக்கு நிதி இழப்பு அதிகம் ஏற்படும். அந்தத் தொகை தெருவிளக்குகளை மாற்றி அமைத்ததால் மின்சார சேமிப்பு தொகையைக் காட்டிலும் மிகவும் அதிகம் என்பதால் இதன் மீது குற்றச்சாட்டை பதிவு செய்தேன்.

ஆதாரமாக தெருவிளக்குகளை மாற்றி அமைப்பதற்கு **30.05.2023** மாமன்றத்தில் வைக்கப்பட்ட SUIDF (Fund), 15$^{th}$ CFC Untied Grant (22-23) Tender date 23.12.2022 தீர்மான வரிசை எண்கள் **79, 80, 81** கோப்பு எண்கள் **23474/2010/E4**, 13110/2022/E4 தீர்மானத்திற்கான நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது.

7. <u>புத்தன் அணை கூட்டு குடிநீர் திட்டம் குழாய் பதிப்பில் முறைகேடு:</u>

நாகர்கோவில் மாநகராட்சி புத்தன் அணை கூட்டு குடிநீர் விநியோக குழாய்கள் பதிக்கப்பட்டதில் உள்ள குறைபாடுகளை குறிப்பிட்டும் அவற்றை சரி செய்திட கேட்டும் எவ்வித குறைபாடுகளும் நிவர்த்திக்கப்படாமல் உள்ளன.

I. குடிநீர் விநியோக குழாய்கள் பல்வேறு இடங்களில் கசிவு ஏற்பட்டு தண்ணீர் வீணாக செல்வதுடன் சாலைகளும் பழுதடைந்து வருகின்றன.

II. நீர் அழுத்தம் சரி பார்க்கப்பட்டு கசிவுகள் சரி செய்யப்பட்டால் மட்டுமே தொடர் கசிவுகள் ஏற்படாத நிலை ஏற்படும்.

III. சாலை மட்டத்தில் இருந்து சுமார் **1.0** மீட்டர் ஆழத்தில் பதிக்கப்பட வேண்டிய பிரதான குழாய்கள் **0.45** மீட்டர் ஆழத்தில் பதிக்கப்பட்டுளளதன் காரணமாக எளிதில் குழாய்கள் உடைந்து பழுதுகள் ஏற்பட்டு வருகின்றன.

IV. பல குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் கிடைக்க பெறாமல் உள்ளது.

V. கட்டையன்விளை ஐசக் தெரு, அம்மன் கோவில் தெரு, இடையன்விளை தாணுவன் நகர் சந்திப்பு, பரமார்த்த லிங்கபுரம் நூலகம் மற்றும் பல பகுதிகளில் சுமார் **25** செ.மீ ஆழத்தில் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளதால் எளிதில் உடைப்பு ஏற்படுகிறது." எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 16.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் தனது 06.10.2025 நாளிட்ட கடிதம் எண் 9700/2025/இ1ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

“1. சாலையில் பதிக்கப்பட்ட வண்ண கற்கள் (Paver Block)

(i) நாகர்கோவில் மாநகராட்சி புதிய வார்டு எண்.16–ல் உள்ள பரமேஸ்வரன் தெருவில் சேதமடைந்த நிலையில் இருந்த பேவர் பிளாக் கற்களை மறு சீரமைப்பு பணிக்காக பயன்படுத்தப்பட்டன. (ii) காங்கிரீட் சாலை தரமானதாக அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. (iii) சாலைகள் மறு சீரமைப்பு செய்யும் பட்சத்தில் மேற்பரப்பு milling செய்து சீரமைக்கப்படும். எனவே குடியிருப்புகளுக்குள் தண்ணீர் புகாது.

பரமேஸ்வரன் தெருவில் பாதாள சாக்கடை பிரதான குழாயில் பதித்தல் ஒவ்வொரு manhole-ல் இருந்தும் குறைந்தபட்சம் நான்கு இணைப்பு முதல் அதிக பட்சம் பன்னிரெண்டு இணைப்புகள் வரை வழங்க வேண்டியுள்ளது. மேலும் குடிநீர் பிரதான குழாய் பதித்தல் இருந்து அனைத்து வீடுகளுக்கும் பகிர்மான குழாய் பதித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதனால் அச்சாலை முற்றிலும் சேதமடைந்து பொதுமக்களது போக்குவரத்திற்கு பெரிதும் இடையூறாக இருந்தது. அப்பகுதி மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் சேதமடைந்த மழைநீர் வடிகால் ஓடையின் பக்க சுவர்கள் மற்றும் அதன் குறுக்கு தெருக்களில் மறு சீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் பரமேஸ்வரன் தெரு (150016R275) சாலை 296.82 மீட்டர் நீளமும் 4.50 மீட்டர் அகலமும் உடையது. முன்னதாக அமைக்கப்பட்ட பேவர் பிளாக் சாலை 2011–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டிருந்தது. சாலை முற்றிலும் சேதமடைந்ததால் அதனை மாற்றிவிட Package VII DAIF 2023-2024 மூலம் பரமேஸ்வரன் தெரு முற்றிலும் சிமெண்ட் தளம் மூலம் சரி செய்யப்பட்டது. இதில் விதிமீறல் ஏதும் இல்லை.

2. கேமராக்கள் பொருத்தப்பட்டது

இம்மாநகராட்சிக்குட்பட்ட நுண் உரம் தயாரிப்பு கூடம் (MCC) சுகாதாரபிரிவு அலுவலகம் (Ward Office) வலம்புரிவிளை உரக்கிடங்கு (Compost yard) மற்றும் நாய்கள் கருத்தடை மையம் (ABC Centre), கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் ஆகியவற்றில் மொத்தம் 46 கேமராக்கள், 5MP கேமரா NVR (Net work Vedio Recorder) 2 எண்ணம் 32”TV, Hard disk, Cable work, Internel Connection and Configuration Power supply 4U Rack arrangement, CCTV கேமரா பொருத்துதல் பணிக்கு ரூ.9,30,000/–க்கு 30.09.2024 அன்று E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| | | |
|---|---|---|
| 1 | திரு. R. ஜெங்கின்ஸ், நாகர்கோவில் | மதிப்பீட்டை விட 0.28% குறைவு (ரூ.781210.00) |
| 2 | ARK Construction, நாகர்கோவில் | மதிப்பீட்டை விட 0.003% குறைவு (ரூ.783443.00) |
| 3 | Sudarsan Communication | மதிப்பீட்டை விட 6.42% அதிகம் (ரூ.833775.40) |

மேற்படி பணிக்கு பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.28% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. R. ஜெங்கின்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மாமன்ற தீர்மானம் எண்.787 நாள் 25.10.2024–இன்படி பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இதில் விதி மீறல் மற்றும் முறைகேடுகள் ஏதும் நடைப்பெறவில்லை.

3. சமூக வலைதளங்களில் விளம்பரம் செய்தது

நாகர்கோவில் மாநகராட்சியில் தமிழக அரசால் பொதுமக்கள் பயன் பெறத்தக்க வளர்ச்சி பணிகள் அனுமதிக்கப்பட்டு நடைபெற்று பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தது போன்ற முக்கிய நிகழ்வுகள் மேலும் மாநகராட்சியில் அன்றாடம் நடைப்பெற்று வரும் பொது மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள் குறித்து சமூக வலைதளங்களான facebook,twitter whats app மற்றும் Instagram மூலம் மாநகராட்சியின் அனைத்து பொதுமக்கள் நலன் சார்ந்த செயல்பாடுகளை பொதுமக்கள் மூலம் அனைத்து தரப்பினரும் தெரிந்து கொள்ளும் வகையில் உரிய பணி மேற்கொள்ள, மேற்காணும் நகராட்சி நிர்வாக இயக்குநரக இணை இயக்குநர் (மாநகராட்சி) அவர்களால் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்பட்டதன்படி மேற்படி பணிமேற்கொள்ள தகுதி வாய்ந்த நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெறப்பட்டது. அதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s All Goods Events, Chennai நிறுவனத்திடமிருந்து 10 மாதத்திற்கு பணிகள் செய்திட விலைப்புள்ளி பெறப்பட்டு மாமன்ற தீர்மானம் 649 நாள் 30.08.2024–இன்படி அனுமதிக்கப்பட்டு, பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைப்பெற்று வருகிறது. மேற்படி பணிக்காக பட்டியல் தொகை இதுவரையிலும் வழங்கப்படவில்லை.

4. மண் அகற்றுதல் பணி

நாகர்கோவில் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடைபெற்று வருகிறது. அதில் பிரதான சாலைகளில் பிராதான குழாய்கள் அமைக்கும் பொழுது தோண்டப்படும் மண் குவியல்களை போக்குவரத்து நெருக்கடியினை தவிர்க்கும் பொருட்டு, மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் கொட்டி சேகரம் செய்யப்பட்டு வந்தது. அவ்வாறே, மாநகராட்சி பிரதான சாலையான ஒழுகினசேரி முதல் குடிநீர் நீரேற்று நிலையம் வரையுள்ள பகுதிகளில் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை பிரதான குழாய்கள் அமைக்கும் போது தோண்டப்பட்ட அதிகப்படியான மண்ணினை மாநகராட்சிக்கு சொந்தமான புதிய அலுவலக கட்டடம் மற்றும் அவிட்டம் திருநாள் மைதானத்தில் கொட்டப்பட்டது. மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுரையின்படி, உள்ளாட்சி அமைப்புகளில் சாலைகள் அமைக்கும் போது உயரத்தினை அதிகப்படுத்திட கூடாது என அறிவுறுத்தப்பட்டது. அதன்படி அதன் பின்னால் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு சாலைகள் திட்டம், தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் மற்றும் மூலதன மாநில நிதி ஆகிய திட்டங்களின்கீழ் அமைக்கப்பட்ட சாலைகள், ஏற்கனவே உள்ள சாலையுடன் கூடிய மண்கள் அப்புறப்படுத்தப்பட்டு சாலைகள் அமைக்கப்பட்டது. இதனால் மாநகராட்சி அவிட்டம் திருநாள் மைதானத்தில் 15870 கன மீட்டர் அளவில் மண் குவியல்கள் வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் 24.03.2022 அன்று மாநகராட்சி அவிட்டம் திருநாள் மைதானத்தில் மரியாதைக்குரிய மேயர், துணை மேயர் மற்றும் அனைத்து மண்டல தலைவர்கள் ஆய்வு மேற்கொண்ட போது மேற்படி மண் குவியல்களை உடனடியாக அப்புறப்படுத்திட உத்தரவிட்டார். எனவே அதனடிப்படையில், மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அறிவுரையின்படியும் பணியின் அவசர அவசியம் கருதி குறுகிய கால உள்ளூர் விலைப்புள்ளி பெற்று ரூ.21,65,235/– செலவில் மண் குவியல்களை மாநகராட்சிக்கு சொந்தமான சரலூர் மாட்டு சந்தை வளாகம் மிகவும் பள்ளமாக இருந்ததினால் அவ்விடத்தில் கொட்டி நிரப்பப்பட்டது. மீதமுள்ள மண்குவியல்களை வலம்புரிவிளை உரகிடங்கில் கொட்டப்பட்டன. மேற்படி அவிட்டம் திருநாள் மைதானத்தில் வைக்கப்பட்டுள்ள 15870m3 மண்குவியல்கள் அன்றைய ஆண்டில் அரசு விலை நிரக்கு ரூ.273.21/m3 ஆகும். மேற்படி 15870m3 மண்குவியல்களின் மொத்த மதிப்பு ரூ.43,35,842/– ஆகும். மேற்படி இடத்தில் கொட்டப்பட்ட மண் மாற்றும் பணிக்கான செலவு ரூ.21,65,235/– என்ற நிலையில் புதிதாக மண் கொட்டப்படுவதற்கு மாநகராட்சிக்கு ஏற்படும் மொத்த செலவு தொகை ரூ.4335842/– ஆகும். எனவே மாற்றப்பட்ட மண் குவியல்கள் மூலம் மாநகராட்சிக்கு கூடுதலாக செலவு ஏற்படுவது தடுக்கப்பட்டுள்ளதாலும் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை என்ற விவரம்.

5. <u>சுப்பையார் குளம் சீரமைப்பு</u>

தமிழ்நாடு வேலைவாய்ப்பு திட்டப்பணியின் கீழ் மாநகராட்சிக்குட்பட்ட சுப்பையார் குளத்தில் நடைப்பெற்ற சம்பந்தமான அனைத்து கோப்புகள், அளவு புத்தகம் மற்றும் வருகை பதிவேடுகள் அனைத்தும் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு கண்காணிப்பு அலுவலகம் நாகர்கோவிலின் கடிதம் எண் DE.17/2024/MISC/KK நாள் 24.05.2024–ன்படி கோரப்பட்டதன்படி இவ்வலுவலக கடிதம் ந.க. எண் இ3/6277/2022 நாள் 28.05.2024–இன்படி ஊழல் தடுப்பு துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி துறையிடமிருந்து கோப்புகள் கோரி பெறப்பட்டு அதனடிப்படையில் விவரம் அனுப்பிவைக்கப்படும்.

6. <u>தெருவிளக்குகள் மாற்றியமைத்தல்</u>

நாகர்கோவில் மாநகராட்சியில் 1 முதல் 52 வார்டுகளில் உள்ள 11358 எண்ணம் தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்திட விரிவான திட்ட அறிக்கை ரூ.6.45 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு 2016ஆம் ஆண்டு நிதி ஆதாரம் வேண்டி அரசுக்கு அனுப்பப்பட்டது. இந்நிலையில் மேற்படி தெருவிளக்குகள் LED விளக்குகளாக மாற்றம் செய்திட M/s. DARASHAW, Bangalore நிறுவனம் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி மூலம் பணி ஆணை வழக்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டது.

எனவே மேற்படி பொருத்தப்பட்ட தெரு விளக்குகளை ஒளி உமிழ் விளக்குகளாக மாற்றம் செய்திட அரசின் கொள்கை முடிவினை அடிப்படையாக கொண்டு நாகர்கோவில் மாநகராட்சியில் உள்ள 14259 எண்ணம் தெருவிளக்குகளை ரூ.1464.24 இலட்சம் மதிப்பீட்டில் LED விளக்குகளாக மாற்றம் செய்திட அரசாணை நிலை எண்.145 MAWS (MA2) நாள் 14.10.2022ன்படி ஒப்புதல் பெறப்பட்டது. பின்னர் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண் 31590/2022/WB நாள் 14.11.2022–ன்படி கீழ் கண்டவாறு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

| சிப்பம் | மண்டலம் | எண்ணம் | தொகை (ரூ. லட்சத்தில் ) |
|---|---|---|---|
| I | வடக்கு & கிழக்கு | 7134 | 766.25 |
| II | தெற்கு & மேற்கு | 7125 | 697.99 |
| | மொத்தம் | 14259 | 1464.24 |

மேற்படி 2 சிப்பங்களாக தயார் செய்யப்பட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்ட பணிகளுக்கு நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்கள் D01/2022/D01, நாள் 16.11.2022–ன்படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை ந.க. எண் 31117/2021/CFC-1 நாள் 17.11.2022–ன்படி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்த M/s. Clout Hi Tech Innovation Pvt.Limited, Chennai நிறுவனத்திற்கு 08.05.2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு ஒப்பந்த விதிகளின்படி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் ஒப்பந்த நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டதன்படி கழற்றப்பட்ட பழைய தெருவிளக்குகளுக்கு விலை விகிதம் தொழில் நுட்ப அனுமதியில் பெறப்பட்ட BOQ-ன்படி விலை நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கான தொகை ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் மாநகராட்சியில் ஆளூர் மற்றும் தெங்கம்புதூர் பேரூராட்சிகள் இணைக்கப்பட்டதால் புதிய தெருவிளக்குகள் பொருத்திட வேண்டியது அவசியமாகின்றது. எனவே அதன்படி, 15–வது மத்திய நிதிக்குழு திட்டம் 2022–2023–ன் கீழ் 1046 எண்ணம் புதிய தெருவிளக்குகள் ரூ.130.84 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்த நிபந்தனைகளின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்சமயம் நல்ல நிலையில் பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

எனவே மேற்படி தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்வது அரசின் கொள்கை முடிவு என்பதாலும், இதனால் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

மேற்படி 2022–ன்படி 19891 எண்ணம் தெருவிளக்குகளுக்கு மின்கட்டணம் உத்தேசமாக ரூ.7482688/– மின்வாரியத்திற்கு செலுத்தப்பட்டு வந்த நிலையில் 14259 + 1046 = 15305 எண்ணம் LED தெருவிளக்குகள் மாற்றப்பட்டு மொத்தம் 20937 எண்ணம் தெருவிளக்குகள் பயன்பாட்டில் வந்த நிலையில் உத்தேசமாக ரூ.7266857/– மட்டும் மின்வாரியத்திற்கு செலுத்தப்பட்டு வருகிறது.

7. <u>புத்தன் அணை கூட்டு குடிநீர் திட்டம் குழாய் பதித்தல்</u>

நாகர்கோவில் மாநகராட்சியில் மூன்றாவது குடிநீர் திட்டம் புத்தன் அணையினை நீர் ஆதாரமாக கொண்டு ரூ.296.00 கோடி மதிப்பீட்டில் அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் சுமார் 1.00 மீ ஆழத்திற்கு பதிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. தற்சமயம் 27 மண்டலங்களில் 12 மண்டலங்கள்

முடிக்கப்பட்டு தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மீதமுள்ள 15 மண்டலங்களில் சோதனை ஓட்டம் நடைப்பெற்று வருவதால், ஆங்காங்கே குடிநீர் கசிவு ஏற்பட்டு வருகிறது. சரிசெய்யும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே மாண்புமிகு உள்ளாட்சி முறைமன்ற நடுவம் மேற்கூறிய இவ்வறிக்கையினை ஏற்று புகார் மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.10.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 12.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 09.10.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“நாகர்கோவில் மாநகராட்சியில் பல்வேறு முறைகேடுகள் சம்பந்தமாக 19.11.2024 அன்று 11 குறைபாடுகள் அடங்கிய புகார் மனுவில் நடவடிக்கை எடுக்க வேண்டிய நகராட்சி நிர்வாகத் துறைக்கு சமர்ப்பித்தேன். இதன் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால் 2 முறைகேடுகளுக்கு மட்டும் தனித்தனியே புகார் மனுவாக உள்ளாட்சி முறைமன்ற அமைப்புகள் நடுவத்திற்கு ஏற்கனவே வழங்கியிருந்தேன். இரு புகார் மனுவிற்கு ஆணை எண்.72/மா/2024 நாள் 21.01.2025 மூலம் உத்தரவு பெற்றுள்ளேன். மீதமுள்ள 7 குற்றச்சாட்டுகளை புகாராக தற்பொழுது சமர்ப்பிக்கின்றேன்.

1. <u>சாலைகளில் பதிக்கப்பட்டிருந்த வண்ண கற்கள் (Paver Block) பெயர்த்தெடுக்கப்பட்டது முறைகேடு</u>

2011–ஆம் ஆண்டு முதல் 2016–ஆம் ஆண்டு வரை பதிக்கப்பட்டு நல்ல நிலையில் பல ஆண்டுகள் நீடித்து இருக்கக் கூடிய பேவர் பிளாக் கற்களை பெயர்த்து மறு விற்பனை செய்து பணபலன் பெற்றது அல்லாமல், கமிஷன் பெற்று தரமற்ற கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான DPR–ல் பேவர் பிளாக் என்பதை மறைத்து கான்கிரீட் சாலை என தவறான DPR தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த கான்கிரீட் சாலைகள் 5 ஆண்டுகளில் மறு சீரமைப்பு செய்யப்படும் போது சாலை உயரம் அதிகரிக்கும். இதனால் குடியிருப்புகளுக்குள் தண்ணீர் தேங்கி பாதிப்பு ஏற்படும்.

வார்டு எண்.16 பரமேஷ்வரன் தெருவில் பாதாள சாக்கடை திட்ட பணி குழாய்கள் பதிப்பதற்காக பேவர் பிளாக்குகளை தோண்டிய பகுதிகளில் கான்கிரீட் மூலம் பேட்ச் ஒர்க் செய்து 30.12.2022ல் ரூ 99,000/– செலவு செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றபட்டு பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அரசு மானிய நிதி மூலம் 12.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கற்கள் முழுமையாக அகற்றப்பட்டு கான்கீரிட் சாலையாக மாற்றப்பட்டதன் காரணமாக மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளது. மேலும் அனைத்து வார்டுகளிலும் பேவர் பிளாக் மாற்றி CC Road என அனைத்து DPR–ல் மாற்றியுள்ளார்கள். எனவே அனைத்து DPR–ஐயும் மறு ஆய்வு செய்ய வேண்டும்.

இப்புகார் குறித்து தகவல் அறியும் சட்டம் 2005ன் கீழ் தகவல் கோரப்பட்டு தகவல் தரப்படாததால் தகவல் ஆணையத்தில் முறையிட்டுள்ளேன்.

2. <u>கேமராக்கள் பொருத்தப்பட்டதில் முறைகேடு</u> :

வலம்புரி உரக்கிடங்கில் 47 கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளனன. Google இணையத்தில் Search செய்தால் ஒரு கேமராவின் விலை ரூ.2,035/– ஆக இருந்தது. ஆனால் இந்த கேமாரக்களை நிறுவதற்கான இதர செலவினங்களுடன் சேர்த்து ரூ.9,30,000/–க்கான செலவின முறைகேடு செய்துள்ளனர். இப்பணிக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்படவில்லை. கோரப்படாமல் ஒரு கேமராவிற்கு ரூ.4800/– என விலை நிர்ணயம் செய்யப்பட்டு முறைகேடு நடைப்பெற்றுள்ளது.

3. <u>சமூக வலை தளத்தில் விளம்பரம் செய்ததில் முறைகேடு</u> :

Facebook, twitter, whats app, etc மூலம் நாகர்கோவில் மாநகராட்சி செய்தியை இணையத்தில் விளம்பரம் செய்ய 10 மாதங்களுக்கு ரூ.9,99,600/– செலவிட மாமன்ற வரிசை எண்.66 நாள் 30.08.2024 E1/10651/2024 மூலம் அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால் இதற்கான விலை புள்ளிகள் இணையத்தின் மூலமாகவோ அல்லது மேலும் உள்ளூர் செய்தித்தாள்களில் விலை புள்ளிகள் கோரி விளம்பரம் செய்யவோ இல்லை. ஆனால் விலை புள்ளியில் கலந்து கொண்ட ஒப்பந்த பணி நிறுவனங்கள் அனைத்தும் வெளியூரை சார்ந்தவர்கள்.

4. <u>மண் விற்பனை மூலம் முறைகேடு</u>:

சட்டவிதி 15ஐ காரணம் காட்டிசாலை பணிகளின் போது எடுக்கப்பட்ட மண் அனாதை மடம் உட்பகுதியில் சேமித்து வைக்கப்பட்டு அதை கனிமவளத்துறை அனுமதியின்றியும், டென்டர் இல்லாமலும் செய்ததில் பத்திரிக்கையில் விலைப்புள்ளி கோரி விளம்பரம் அளிக்காமலும், ஒரு கோடி மதிப்பீட்டிலான மண் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

5. <u>சுப்பையார்குளம் சீரமைப்பு முறைகேடு</u>:

கிருஷ்ணன் கோயில் பகுதி சுப்பையார் குளம் புனரமைப்புக்கென சுமார் ரூ.3 கோடி மதிப்பிலான மண் ஒப்பந்ததாரர் மூலம் சட்டத்திற்கு புறம்பாக, அடிப்பகுதிவரை தோண்டி எடுக்கப்பட்டு மண் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதனால் ஏற்பட்ட பள்ளத்தில் பொதுமக்கள் விழுந்து இறந்துள்ளனர். பொதுப் பணித் துறைக்கு சொந்தமான இக்குளத்தை புனரமைப்பு செய்வதற்கு நாகர்கோவில் மாநகராட்சியால் எவ்வித அனுமதியும் பெறவில்லை. மண் அப்புறப்படுத்துவதற்கு கனிமவளத்துறையிடம் முறையான அனுமதியும் பெறப்படவில்லை. மண் தோண்டி எடுக்கப்பட்டதை குறித்து பொதுப்பணித்துறையால் நாகர்கோவில் காவல் துறையில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் காவல் துறையால் இது வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இம்முறைகேடுகள் குறித்து லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் அளித்துள்ளேன்.

6. <u>உயரிய நிலையில் பயன்பாட்டில் இருந்த தெரு விளக்குகளை மாற்றியமைத்து முறைகேடு</u>:

நல்லமுறையில் இயங்கிக் கொண்டிருந்த மின் விளக்குகளை மாற்றி புதிய மின் விளக்குகள் பொருத்த ஒப்பந்த புள்ளியில் எந்த நிபந்தனையும் விதிக்கப்படவில்லை. மின்கட்டண செலவீனத்தை குறைப்பதாக தெரு விளக்குகளை மாற்றுவது என திட்டமிட்டு நல்ல நிலையில் உள்ள 14,259 தெருவிளக்குகளை அகற்றிவிட்டு புதிதாக தெருவிளக்குகளை அமைக்க ரூ.15,95,08,000 செலவீனம் செய்து மேற்கண்ட பணிக்கு பெருந்தொகை கமிஷன் பெற்றதுடன் பழைய விளக்குகளை விற்பனை செய்து மொத்த தொகையும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. நான் மாமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது ஒப்பந்ததாரர் அதை விற்று விட்டதாக மாமன்ற கூட்டத்தில் மேயர் தெரிவித்தார். இதனால் நாகர்கோவில் மாநகராட்சிக்கு பெரும் அளவில் நிதி இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

கொள்முதல் செய்யப்பட்ட ஒளி விளக்குகளுக்கென கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி BOQ–ல் ஒளி விளக்கின் திறன் விவரங்கள் இல்லை. தரச்சான்றிதழ், ISI Certificate போன்ற விவரங்களும் குறிப்பிடப்படவில்லை. மேலும் AMC பற்றி குறிப்பிடப்படவில்லை.

<u>7. புத்தன் அணை கூட்டு குடிநீர் திட்டம் குழாய் பதிப்பில் முறைகேடு:</u>

I. குடிநீர் விநியோக குழாய்கள் பல்வேறு இடங்களில் கசிவு ஏற்பட்டு தண்ணீர் வீணாக செல்வதுடன் சாலைகளும் பழுதடைந்து வருகின்றன. நீர் அழுத்தம் சரி பார்க்கப்பட்டு கசிவுகள் சரி செய்யப்படவேண்டும்.

II. சாலை மட்டத்தில் இருந்து சுமார் 1.0 மீட்டர் ஆழத்தில் பதிக்கப்பட வேண்டிய பிரதான குழாய்கள்0.45 மீட்டர் ஆழத்தில் பதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக எளிதில் குழாய்கள் உடைந்து பழுதுகள் ஏற்பட்டு வருகின்றன.

III. கட்டையன்விளை ஐசக் தெரு, அம்மன் கோவில் தெரு, இடையன்விளை தாணுவன் நகர் சந்திப்பு, பரமாத்த லிங்கபுரம் நூலகம் மற்றும் பல பகுதிகளில் சுமார் 25 செ.மீ ஆழத்தில் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளதால் எளிதில் உடைப்பு ஏற்படுகிறது.

மேற்கண்ட நாகர்கோவில் மாநகராட்சி புத்தன் அணை கூட்டு குடிநீர் விநியோக குழாய்கள் பதிக்கப்பட்டதில் உள்ள குறைபாடுகளை சரி செய்திட கேட்டும் எவ்வித குறைபாடுகளும் நாகர்கோவில் மாநகராட்சியால் நிவர்த்தி செய்யப்படாமல் உள்ளன.

மேற்கண்ட 7 குற்றச்சாட்டுகள் குறித்து முறையான மூன்றாம் நபர் மூலம் ஆய்வோ அல்லது Vigilance Enquiry மூலமோ விசாரணை நடைப்பெற்றால் தான் முறைகேடுகள் வெளி வரும் என இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட புகார்களை குறித்து 1 முதல் 119 பக்கங்கள் வரை கொண்ட ஆவண புத்தகம் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.".

6. நாகர்கோவில் மாநகராட்சி இளநிலை பொறியாளர்கள் 09.10.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

1. <u>சாலையில் பதிக்கப்பட்ட வண்ண கற்கள் (Paver Block)</u>

(i) நாகர்கோவில் மாநகராட்சி புதிய வார்டு எண்.16–ல் உள்ள பரமேஸ்வரன் தெருவில் சேதமடைந்த நிலையில் இருந்த பேவர் பிளாக் (Paver Block) கற்களை மறு சீரமைப்பு பணிக்காக பயன்படுத்தப்பட்டன.

(ii) காங்கிரீட் சாலை தரமானதாக அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

(iii) சாலைகள் மறு சீரமைப்பு செய்யும் பட்சத்தில் மேற்பரப்பு milling செய்து சீரமைக்கப்படும் போது குடியிருப்புகளுக்குள் தண்ணீர் புகாது.

பரமேஸ்வரன் தெருவில் பாதாள சாக்கடை பிரதான குழாயில் பதித்தல் ஒவ்வொரு manhole-ல் இருந்தும் குறைந்தபட்சம் 4 இணைப்பு முதல் அதிக பட்சம் 12 இணைப்புகள் வரை வழங்க வேண்டியுள்ளது. மேலும் குடிநீர் பிரதான குழாய் பதித்ததிலிருந்து அனைத்து வீடுகளுக்கும் பகிர்மான குழாய் பதித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இதனால் அச்சாலை முற்றிலும் சேதமடைந்து பொதுமக்கள் போக்குவரத்திற்கு பெரிதும் இடையூறாக இருந்தது. அப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று சேதமடைந்த மழைநீர் வடிகால் ஓடையின் பக்க சுவர்கள் மற்றும் அதன் குறுக்கு தெருக்களில் மறு சீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் பரமேஸ்வரன் தெரு 296.62 மீட்டர் நீளமும் 4.50 மீட்டர் அகலமும் உடையது. முன்னதாக அமைக்கப்பட்ட பேவர் பிளாக் (Paver Block) சாலை 2011–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டிருந்தது. சாலை முற்றிலும் சேதமடைந்ததால் அதனை மாற்றிவிட Package VII DAIF 2023-2024 மூலம் பரமேஸ்வரன் தெரு முற்றிலும் சிமெண்ட் தளம் அமைத்து சரி செய்யப்பட்டது.

மேற்கண்ட பணிக்கான DPR சிமெண்ட் ரோடு என்று முறையாக குறிப்பிடப்பட்டுதான் தயாரிக்கப்பட்டது. எனவே இதில் விதி மீறல் ஏதுமில்லை.

2. <u>கேமராக்கள் பொருத்தப்பட்டது</u>

மாநகராட்சிக்குட்பட்ட நுண் உரம் தயாரிப்பு கூடம் (MCC) சுகாதார பிரிவு அலுவலகம் (Ward Office) வலம்புரிவிளை உரக்கிடங்கு (Compost yard) மற்றும் நாய்கள் கருத்தடை மையம் (ABC Centre), கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் ஆகியவற்றில் மொத்தம் 46 கேமராக்கள், 5MP கேமரா NVR (Net work Vedio Recorder) 2 எண்ணம் 32”TV, Hard disk, Cable work, Internet Connection and Configuration Power supply 4U Rack arrangement, CCTV கேமரா பொருத்துதல் பணிக்கு ரூ.9,30,000/–க்கு 30.09.2024 அன்று E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 3 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று அதில், பெறப்பட்ட 3 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.28% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.R.ஜெங்கின்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மாமன்ற தீர்மானம் எண்.787 நாள் 25.10.2024–ன்படி பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் குறிப்பிட்ட கேமரா விலை 2MPக்கானது. ஆனால் மாநகராட்சியால் பொருத்தப்பட்ட கேமரா 5MP வகைப்பாட்டை சேர்ந்தது என்பதால் அதில் ரூ.4,800/– என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே விதி மீறல் மற்றும் முறைகேடுகள் ஏதும் நடைப்பெறவில்லை.

3. <u>சமூக வலைதளங்களில் விளம்பரம் செய்தது</u>

நாகர்கோவில் மாநகராட்சியில் தமிழக அரசால் பொதுமக்கள் பயன் பெறதக்க வளர்ச்சி பணிகள் மற்றும் பொது மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள் குறித்து சமூக வலைதளங்கள் மூலம் அனைத்து தரப்பினரும் தெரிந்து கொள்ளும் வகையில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரக இணை இயக்குநர் (மாநகராட்சி) அவர்களால் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்பட்டு 3 ஒப்பந்தப்புள்ளிகள் சென்னை தலைமையிடத்திலிருந்து பெறப்பட்டு இப்பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s.All Goods Events, Chennai நிறுவனத்திற்கு மாமன்ற தீர்மானம் எண்.640 நாள் 30.08.2024–ன்படி அனுமதி மற்றும் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைப்பெற்று வருகிறது. பணிக்கான பட்டியல் தொகை இதுவரையிலும் வழங்கப்படவில்லை.

4. <u>மண் அகற்றுதல் பணி</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுரையின்படி, உள்ளாட்சி அமைப்புகளில் சாலைகள் அமைக்கும் போது உயரத்தினை அதிகப்படுத்த கூடாது என அறிவுறுத்தப்பட்டு அதனடிப்படையில் சிறப்பு சாலைகள் திட்டம், தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம் மற்றும் மூலதன மாநில நிதி ஆகிய திட்டங்களின்படி அமைக்கப்பட்ட சாலைகள் ஏற்கனவே உள்ள சாலையுடன் கூடிய மண்கள் அப்புறப்படுத்தப்பட்டு சாலைகள் அமைக்கப்பட்ட போது 15870 கன மீட்டர் அளவில் மண் அவிட்டம் திருநாள் மைதானத்தில் வைக்கப்பட்டிருந்தன. மாநகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அறிவுரையின்படி பணியின் அவசர அவசியம் கருதி குறுகிய கால உள்ளூர் விலைப்புள்ளி பெற்று ரூ.21,65,235/– மண் குவியல்கள் மாநகராட்சிக்கு சொந்தமான சரலூர் மாட்டு சந்தை வளாகம் மிகவும் பள்ளமாக இருந்ததால் அவ்விடத்தில் கொட்டி நிரப்பப்பட்டது. அதன் விவரம் அளவு புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள மண் குவியல்களை வலம்புரிவிளை உரக்கிடங்கில் கொட்டப்பட்டன. அவிட்டம் திருநாள் மைதானத்தில் வைக்கப்பட்டுள்ள 15870m3 மண்குவியல்களுக்கு அரசு நிர்ணயித்த விலை ரூ.273.21/m3 ஆகும். 15870m3 மண்குவியல்களின் மொத்த மதிப்பு ரூ.43,35,842/– ஆகும். கொட்டப்பட்ட மண் மாற்றும் பணிக்கான செலவு ரூ.21,65,235/–. புதிதாக மண் கொட்டப்படுவதற்கு மாநகராட்சிக்கு ஏற்படும் மொத்த செலவு தொகை ரூ.4335842/– ஆகும். எனவே மாற்றப்பட்ட மண் குவியல்கள் மூலம் மாநகராட்சிக்கு கூடுதலாக செலவு ஏற்படுவது தடுக்கப்பட்டுள்ளதாலும் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் ஏற்பட வில்லை .

5. <u>சுப்பையார் குளம் சீரமைப்பு</u>

தமிழ்நாடு வேலை வாய்ப்பு திட்டப்பணியின் கீழ் மாநகராட்சிக்குட்பட்ட சுப்பையார் குளத்தில் நடைப்பெற்ற சம்பந்தப்பட்ட அனைத்து கோப்புகள் அளவு புத்தகம் மற்றும் வருகை பதிவேடுகள் அனைத்தும் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு கண்காணிப்பு அலுவலகம், 28.05.2024 அன்று ஊழல் தடுப்பு துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி துறையிடமிருந்து கோப்புகள் கோரி பெறப்பட்டு விவரம் அனுப்பி வைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

6. <u>தெருவிளக்குகள் மாற்றியமைத்தல்</u>

நாகர்கோவில் மாநகராட்சியில் 1 முதல் 52 வார்டுகளில் உள்ள 11358 எண்ணம் தெரு விளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்திட விரிவான திட்டஅறிக்கை ரூ.6.45 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டு 2016ஆம் ஆண்டு நிதி ஆதாரம் வேண்டி அரசுக்கு அனுப்பப்பட்டது. தெரு விளக்குகள் LED விளக்குகளாக மாற்றம்

செய்திட M/s.DARASHAW, Bangalore நிறுவனம் மூலம் திட்ட அறிக்கை தயார் செய்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,திருநெல்வேலி மூலம் பணி ஆணை வழக்கப்பட்டு விரிவான திட்ட அறிக்கை பெறப்பட்டது.

பொருத்தப்பட்ட தெரு விளக்குகளை ஒளி உமிழ் விளக்குகளாக மாற்றம் செய்திட அரசின் கொள்கை முடிவின்படி நாகர்கோவில் மாநகராட்சியில் உள்ள 14259 எண்ணம் தெருவிளக்குகளை ரூ.1464.24 இலட்சம் மதிப்பீட்டில் LED விளக்குகளாக மாற்றம் செய்திட அரசாணை நிலை எண்.145 MAWS (MA2) நாள் 14.10.2022ன்படி ஒப்புதல் பெறப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை நாள் 14.11.2022ன்படி மேற்கண்ட பணிகள் நிறைவேற்றப்பட்டன.

இப்பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/s,Clout Hi Tech Innovation Pvt.Limited, Chennai நிறுவனத்திற்கு 08.05.2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு ஒப்பந்த விதிகளின்படி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் ஒப்பந்த நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டதன்படி கழற்றப்பட்ட பழைய தெருவிளக்குகளுக்கு விலை விகிதம் தொழில் நுட்ப அனுமதியில் பெறப்பட்ட BOQ-ன்படி விலை நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கான தொகை ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.

மாநகராட்சியில் ஆளூர் மற்றும் தெங்கம்புதூர் பேரூராட்சிகள் இணைக்கப்பட்டதால், 15வது மத்திய நிதிக்குழு திட்டம் 2022–2023–ன் கீழ் 1046 எண்ணம் புதிய தெருவிளக்குகள் ரூ.130.84 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்த நிபந்தனைகளின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்சமயம் நல்ல நிலையில் பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. எனவே தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்வது அரசின் கொள்கை முடிவு. இதனால் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

7. புத்தன் அணை கூட்டு குடிநீர் திட்டம் குழாய் பதித்தல்

நாகர்கோவில் மாநகராட்சியில் 3வது குடிநீர் திட்டம் புத்தன் அணையினை நீர் ஆதாரமாக கொண்டு ரூ.296.00 கோடி மதிப்பீட்டில் அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் சுமார் 1.00 மீ ஆழத்திற்கு பதிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. தற்சமயம் 27 மண்டலங்களில் 12 மண்டலங்கள் முடிக்கப்பட்டு தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மீதமுள்ள 15 மண்டலங்களில் சோதனை ஓட்டம் நடைப்பெற்று வருவதால், ஆங்காங்கே குடிநீர் கசிவு ஏற்பட்டு வருகிறது. சரிசெய்யும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரத்தினை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.''.

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த ஆவணம், எதிர்மனுதாரரான நாகர்கோவில் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் நாகர்கோவில் மாநகராட்சியில்,

(1) சாலையில் வண்ண கற்கள் பெயர்க்கப்பட்டதில் முறைகேடு, (2) கேமரா பொருத்தியதில் முறைகேடு, (3) சமூக வலைதளங்களில் விளம்பரம் செய்த முறைகேடு (4) மண் விற்பனை முறைகேடு (5) சுப்பையார்குளம் சீரமைப்பு முறைகேடு (6) நல்லநிலையில் இருந்த தெருவிளக்குகளை மாற்றியதில் முறைகேடு மற்றும் (7) புத்தன் அணை கூட்டு குடிநீர் திட்டம் குழாய் பதிப்பில் முறைகேடு ஆகிய முறைகேடுகள் நடந்துள்ளதாக தெரிவித்து, இம்முறைகேடுகள் குறித்து மூன்றாம் நபர் மூலம் ஆய்வோ அல்லது Vigilance Enquiry மூலமோ விசாரணை கோரியுள்ளது, மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

நாகர்கோவில் மாநகராட்சி வார்டு எண்16–ல் பரமேஸ்வரன் தெருவில் சேதமடைந்த பேவர் பிளாக் கற்களை மறுசீரமைப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டதும், பொது மக்களின் கோரிக்கை ஏற்று பரமேஸ்வரன் தெருவில் முற்றிலும் சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டதும், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பல இடங்களில் 46 கேமராக்கள், 5 MP கேமரா மற்றும் அவற்றை பொருத்துவதற்காக ரூ.9,30,000/–ல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டதும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை தலைமையிடத்திலிருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s All Goods Events, Chennai நிறுவனத்திற்கு சமூக வலைதளங்களில் விளம்பரம் செய்ய பணி வழங்கப்பட்டது என்பதும், அவசர அவசியம் கருதி குறுகிய கால உள்ளூர் விலைப்புள்ளி பெற்று மண்குவியல்கள் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் முறையாக கொட்டப்பட்டதும், அதற்கான விவரம் அளவுபுத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதும், சுப்பையார் குளம் சீரமைப்பு பணிக்கான கோப்புகள் ஊழல் தடுப்பு துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதும், அரசின் கொள்கை முடிவின்படி நாகர்கோவில் உள்ள தெருவிளக்குகள் LED விளக்குகளாக மாற்றம் செய்ய, அரசாணை (நிலை) எண் 145 MAWS (MA2) நாள் 14.10.2022–ன்படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி மேற்கொள்ளப்பட்டது என்பதும், நாகர்கோவில் மாநகராட்சியில் 3வது குடிநீர்த் திட்டம் புத்தன் அணையிணை நீர் ஆதாரமாக கொண்டு ரூ.296.00 இலட்சம் மதிப்பில் அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 27 மண்டலங்களில் 12 மண்டலங்களில் பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 15 மண்டலங்களில் சோதனை ஓட்டம் நடைபெற்று வருவதும், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளர்களின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிந்தாலும், மனுதாரர் புகார் தொடர்பாக,

<u>கேமராக்கள் பொருத்தப்பட்டது</u>

மாநகராட்சிக்குட்பட்ட நுண் உரம் தயாரிப்பு கூடம் (MCC), சுகாதார பிரிவு அலுவலகம் (Ward Office), வலம்புரிவிளை உரக்கிடங்கு (Compost yard) மற்றும் நாய்கள் கருத்தடை மையம் (ABC Centre), கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் ஆகியவற்றில் பொருத்தப்பட்ட கேமராக்களில், மனுதாரர் குறிப்பிட்ட கேமரா விலை 2MPக்கானது. ஆனால் மாநகராட்சியால் பொருத்தப்பட்ட கேமரா 5MP வகைப்பாட்டை சேர்ந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே விதிமீறல் மற்றும் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என மாநகராட்சியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சமூக வலைதளங்களில் விளம்பரம் செய்தது</u>

நாகர்கோவில் மாநகராட்சியில் தமிழக அரசால் பொதுமக்கள் பயன் பெறதக்க வளர்ச்சி பணிகள் மற்றும் பொது மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகள் குறித்து சமூக வலைதளங்கள் மூலம் அனைத்து தரப்பினரும் தெரிந்து கொள்ளும் வகையில் மேற்கொண்ட பணிக்கு மாமன்ற தீர்மானம் எண்.640 நாள் 30.08.2024–ன்படி அனுமதி மற்றும் பணி உத்தரவு வழங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. பணிக்கான பட்டியல் தொகை இதுவரையிலும் வழங்கப்படவில்லை என மாநகராட்சியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>தெருவிளக்குகள் மாற்றியமைத்தல்</u>

நாகர்கோவில் மாநகராட்சியில் உள்ள வார்டுகளில் பொருத்தப்பட்டிருந்த தெரு விளக்குகளை ஒளி உமிழ் விளக்குகளாக (LED) மாற்றம் செய்திட அரசின் கொள்கை முடிவின்படி, மேற்கண்ட பணிகள் நிறைவேற்றப்பட்டன. இதனால் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை என மாநகராட்சி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேற்கண்ட இனங்களில் குறிப்பிட்டதற்கிணங்க இம்முறைமன்ற நடுவத்தால் மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

இருப்பினும், கீழ்க்கண்ட இனங்களில்,

<u>சாலையில் பதிக்கப்பட்ட வண்ண கற்கள் (Paver Block)</u>

அண்ணா பல்கலைக் கழக பொறியியல் கல்லூரி அல்லது அதன் உறுப்புக் கல்லூரியின் பேராசிரியர் உள்ளடக்கிய ஒரு குழு அமைத்து மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ளபடி சாலையில் பதிக்கப்பட்ட வண்ண கற்கள் பணிகள் தொடர்பாக விரிவாக கள ஆய்வு மேற்கொண்டு அக்குழுவின் அறிக்கையை பெற்றும், இப்பணிகள் செய்ததில் அரசிற்கு நிதி இழப்பு ஏற்பட்டிருக்கிறதா ? நடைமுறை விதி மீறல்கள் உள்ளதா ? என்பது குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கையின் அறிக்கையை பெற்றும்,

<u>மண் அகற்றுதல் பணி</u>

செயற்பொறியாளர் தலைமையில் மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ளபடி மண் அகற்றும் பணிகள் தொடர்பாக விரிவாக கள ஆய்வு மேற்கொண்டு அதன் அறிக்கையை பெற்றும், இப்பணிகள் செய்ததில் அரசிற்கு நிதி இழப்பு ஏற்பட்டிருக்கிறதா நடைமுறை விதி மீறல்கள் உள்ளதா ? என்பது குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கையின் அறிக்கையை பெற்றும்,

<u>சுப்பையார் குளம் சீரமைப்பு</u>

தமிழ்நாடு வேலை வாய்ப்பு திட்டப்பணியின் கீழ் மாநகராட்சிக்குட்பட்ட சுப்பையார் குளத்தில் நடைபெற்ற பணிகள் சம்பந்தப்பட்ட அனைத்து கோப்புகள் அளவு புத்தகம் மற்றும் வருகை பதிவேடுகள் அனைத்தும் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு கண்காணிப்பு அலுவலகம், 28.05.2024 அன்று ஊழல் தடுப்பு துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதால், அத்துறையின் அறிக்கையை பெற்றும்,

<u>புத்தன் அணை கூட்டு குடிநீர் திட்டம் குழாய் பதித்தல்</u>

செயற்பொறியாளர் தலைமையில் ஒரு குழு அமைத்து மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ளபடி புத்தன் அணை கூட்டு குடிநீர் திட்டம் குழாய் பதித்தல் பணிகள் தொடர்பாக விரிவாக கள ஆய்வு மேற்கொண்டு அக்குழுவின் அறிக்கையை பெற்றும், இப்பணிகள் செய்ததில் அரசிற்கு நிதி இழப்பு ஏற்பட்டிருக்கிறதா? நடைமுறை விதி மீறல்கள் உள்ளதா? என்பது குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கையின் அறிக்கையை பெற்றும்,

அதனடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு.S.V.உதயகுமார்
கதவு எண் 439A, M.S ரோடு,
பார்வதிபுரம்,
நாகர்கோவில்–629 003.

(2) ஆணையர்,
நாகர்கோவில் மாநகராட்சி,
நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ. கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர்